மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்குச் சென்றுள்ளார். கரூர் மாவட்டத்தில் அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு...








● கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார்.





● கரூர் தாந்தோணிமலை பகுதியைச் சேர்ந்த ‘தளிர்’ மகளிர் சுய உதவிக்குழுவினரால் நடத்தப்படும் தொழில் நிலையத்தை ஆய்வு செய்து அவர்களுடன் கலந்துரையாடினார்.



● கரூர் மாவட்டத்திற்கு அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.



● கரூர் மாவட்ட இளைஞர் அணியில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.



● கரூர் மாநகரில் ரூ.40 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார்.





● கருரில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 18 ஆயிரத்து 332 பயனாளிகளுக்கு ரூ.163 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தார்.



● கரூர் மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள பாக முகவர், பாக உறுப்பினர், பாக டிஜிட்டல் ஏஜென்டுகள் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



